செய்தி வெளியீடு எண்: 179 நாள்: 15.03.2013

# செய்தி வெளியீடு

# நிர்ணயிக்கப்பட்ட கேபிள் டிவி கட்டணத்தை பொதுமக்கள் ஆன்லைன் மற்றும் இந்தியன் வங்கி அல்லது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் செலுத்தலாம்

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மேலாண்மை இயக்குநர் தகவல்

குறைவான கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை மக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு புத்துயிரூட்டி, தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது. சில கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் பொது மக்களிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட சந்தாத் தொகையை விட கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக புகார்கள் வரப்பெற்றன. எனவே, பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கேபிள் டிவி சேவைக்கான மாதச் சந்தாத்தொகை ரூ.70/– ஐ 01.03.2013 முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு நேரடியாக ஆன்லைன் முறையிலும், அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவும் செலுத்த கூடுதல் வசதிகள் செய்யப்பட்டன.

தற்போது பொதுமக்களின் கூடுதல் வசதிக்காக அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் ஆன்லைன் www.arasucable.com என்ற இணையதளத்தின் வழியாக செலான் (Challan) எடுத்து இந்தியன் வங்கி அல்லது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இவற்றின் எல்லா கிளைகளிலும் மாதச் சந்தாத்தொகையினை செலுத்தவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர தற்போதுள்ள நடைமுறைப்படி கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் மூலமாகவும் செலுத்தலாம். இதன் மூலம் பொது மக்கள் மாதக் கட்டணமான ரூ.70/–ஐ மட்டும் செலுத்தி கேபிள் டிவி சேவையினைப் பெற்று பயனடையலாம் எனவும், இவ்வாறு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் வசூலிக்கப்படும் கேபிள் டிவி மாதச் சந்தாத்தொகை ரூ.70/–ல் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களின் பங்கான ரூ.50/–ஐ அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் எனவும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. து. விவேகானந்தன், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலாண்மை இயக்குநருக்காக

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**